# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை – 2020

### தரம் - 12 (2021) | பொருளியல்

பெயர் / சுட்டெண் : .....................

திருமதி.கௌ.சுரேஸ், B.Com, PGDE


**தரப்பட்ட வினாக்கள் அனைத்திற்கும் பதிலளிக்குக.**

### பொருளாதார அறிமுகம்

1. அருமை என்பதன் பொருள் என்ன? அது ஏன் ஒரு தெரிவுப் பிரச்சனையாக கருதப்படுகிறது?
2. உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் பொருளாதார வளங்களாகும். இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடையை காரணங்களுடன் தருக.
3. அமையச் செலவு என்றால் என்ன? அமையச் செலவு பூச்சியமாகும் சந்தர்ப்பங்களை தருக.
4. உழைப்பில் இருந்து முயற்சியை வேறுபடுத்துக.
5. மூலதனத்துக்கும் முதலீட்டுக்கும் இடையிலான வேறுபாடு யாது?

### உற்பத்தி சாத்திய வளையி

1. உற்பத்தி சாத்திய வளையி என்றால் என்ன? வரைபடத்துடன் விளக்குக.
2. பொருளாதார விளைதிறன் என்றால் என்ன? அதனை அடைவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் எவை?
3. உற்பத்தி சாத்திய வளையியின் பயன்பாடுகளை சிற்றினப் பொருளியல் பேரினப் பொருளியல் ஊடாக விளக்குக.
4. பின்வருவனவற்றை உற்பத்தி சாத்திய எல்லை மூலம் விளக்குக.
   அ. பொருளாதாரத்துக்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெறுதல்.
   ஆ. அடைய முடியாத உற்பத்தி சேர்க்கை
   இ. குறைந்த வளப் பயன்பாடு
   ஈ. பொருளாதார வளர்ச்சி
5. பின்வரும் வரைபடமானது குடிசார் (Civil) மற்றும் இராணுவப் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றிற்கான ஓர் உற்பத்தி சாத்திய வளையியை காட்டுகின்றது. இப் பொருளாதாரம் தற்போது புள்ளி K ல் உற்பத்தி செய்வதாக கருதுக.




I. இப் பொருளாதாரத்தின் ஊற்பத்தி சாத்திய வளையியானது அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பச் செலவை காட்டுகின்றதா? விளக்குக.

II. இப் பொருளாதாரம் யுத்தம் ஒன்றிற்கு செல்ல வேண்டி ஏற்பட்டால், உற்பத்திப்புள்ளி K யில் இருந்து பெரும்பாலும் எப் புள்ளியை நோக்கி நகரக்கூடும்? விளக்குக.

III. பொருளாதாரமானது ஒரு மந்த நிலையினை (Recession) அடைந்தால் உற்பத்திப் புள்ளி K யில் இருந்து எப் புள்ளியை நோக்கி நகரக்கூடும்? விளக்குக.

**அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளும் பொருளாதார முறைமைகளும்**

1. ஒவ்வொரு சமூகமும் எதிர்நோக்கும் 03 அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளும் எவை? விளக்குக.
2. பொருளாதார முறைமைகளை வகைப்படுத்தும் நியதிகளைக் குறிப்பிட்டு பொருளாதார முறைமைகளை வகைப்படுத்துக.
3. சந்தைப் பொருளாதாரத்துக்கு கட்டளைப் பொருளாதாரத்துக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.
4. சமூக சந்தைப் பொருளாதாரம், சமவுடைமை சந்தைப் பொருளாதாரம் என்பவற்றின் பண்புகளைத் தருக.
5. சந்தைப் பொருளாதாரம், கட்டளைப் பொருளாதாரம் வள ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்கின்றது. என்பதை விளக்குக.

**கேள்வி, நிரம்பல் மற்றும் நெகிழ்ச்சி**

1. செயற்திறனான கேள்வி என்றால் என்ன?
2. கேள்வி விதி என்றால் என்ன? வருமான விளைவு பதீலுட்டு விளைவினூடாக கேள்வி விதியை விளக்குக?
3. கையடக்க தொலைபேசியின் கேள்வியை தீர்மானிக்கும் காரணிகள் எவை?
4. கேள்வி மாற்றம் மற்றும் கேள்வித்தொகை மாற்றம் என்பதை விளக்குக.
5. நிரம்பலை தீர்மானிக்கும் காரணிகள் எவை?
6. நிரம்பல் வளையி கீழிருந்து மேல்நோக்கி செல்வதற்கான காரணங்கள் எவை?
7. நிரம்பல் விதிக்கான காரணங்கள் எவை?
8. X, Y, Z எனும் பண்டங்களுக்கான சில நெகிழ்ச்சிப் பெறுமானங்கள் காட்டப்பட்டுள்ளன.
   X பண்டத்தின் விலைக் கேள்வி நெகிழ்ச்சி = +0.2
   X,Y பண்டங்களுக்கிடையிலான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி = +1.5
   Z பண்டத்தின் வருமான கேள்வி நெகிழ்ச்சி = - 1.0
   மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி X,Y மற்றும் Z பண்டங்களை வகைப்படுத்துக.
9. விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள் எவை?
10. நிரம்பல் நெகிழ்ச்சிக்கான காரணங்கள் எவை?

### சந்தைப் பொருளாதாரத்தில் அரச தலையீடு

குறித்த பொருளொன்றின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன

$$Qd = 150 - 5P$$

$$Qs = 75 + 10P$$

மேற்படி தகவலின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை
2. சந்தைச் சமநிலையின் போதுநிலவும் நுகர்வோன் மிகை
3. சமநிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம்.
4. அரசாங்கத்தினால் அப்பொருளின் மீது ரூபா 1.50 அலகு வரியொன்று விதிக்கப்படுமாயின்
   - அ) வரியின் பின்னரான புதிய சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை
   - ஆ) அரசாங்கத்தின் வரிவருமானம்
   - இ) வரியின் காரணமாக நுகர்வோன் மிகையில் ஏற்படும் மாற்றத்தின் அளவு
   - ஈ) வரியின் காரணமாக சமூகத்திற்கு ஏற்படும் நலன் இழப்பின் அளவு

### உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை என்றால்

1) என்ன என்பதை வரிப்படத்துடன் விளக்கி உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படும் பொருட்களுக்கு உதாரணம் தருக?
2) உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டுவிலையின் பொருளாதார விளைவுகள் எவை?
3) குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலை என்றால் என்ன? அதாவது பொருளாதார விளைவுகள் எவை?
4) குறை நிரப்பு கொடுப்பனவு முறை (Deficiency payment system) என்றால் என்ன? வரைபடம் மூலம் விளக்குக?
5) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் தரப்படுகின்றன?

   $Qd = 30 - 2p$ , $Qs = -2 + 2p$

   1. இச்சந்தையின் சமநிலை விலை மற்றும் தொகையினை நிர்ணயிக்குக.
   2. சமநிலையின் போது உற்பத்தியாளர் மிகை? நுகர்வோர் மிகையினைக் கணிப்பிடுக?
   3. அரசாங்கமானது ரூ.10 தளவிலையினை (Floor Price) விலை ஆதரவு நடவடிக்கையுடன் (Price Support system) விதிக்கின்றது. தள விலை காரணமாக ஏற்படும் பொருளாதார விளைவுகளைக் கணிப்பிடுக.

      நுகர்வோன் மிகை இழப்பு உற்பத்தியாளர் மிகை அதிகரிப்பு

      சமூக நலன் இழப்பு (Social welfare loss)

### உற்பத்திக் கோட்பாடு மற்றும் செலவுக்கோட்பாடு

01. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்றால் என்ன?
02. அளவுத்திட்டச் சிக்கனங்கள் என்றால் என்ன?
03. பிரவேசத்தடைகள் (டியசசநைச வழ நவெசல) என்ற பதத்தினால் கருதப்படுவது யாது? பிரவேசத் தடைகளின் வகைகளை குறிப்பிடுக?
04. அளவுத்திட்ட விளைவு வசதியின் 3 வடிவங்களை விளக்குக?
05. பணியுரிமைச்சந்தை மற்றும் சிலருரிமை சந்தை அமைப்புக்களின் ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிடுக?

06. குறுங்காலச் செலவு வளையிகள் ஏன் ரு வடிவத்தில் காணப்படுகின்றன விளக்குக?

07. நிறை போட்டிச் சந்தை அசாதாரண இலாபம் உழைக்கும் நிலையினை வரைபில் காட்டி விளக்குக?

08. நேர்ச்செலவு, நேரில் செலவுகளுக்கு உதாரணம் தந்து விளக்குக?

09. உற்பத்தியாளர் மிகை, பொருளியல் இலாபம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக?

10. நிறைபோட்டி சந்தை சந்தை ஒன்றின் செலவு விபரங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| அலகு ஒன்றுக்கான விற்பனை விலை | - ரூபா 20.00 |
| சாராசரி மாறும் செலவு (AVC) | - ரூபா 12.00 |
| விற்பனை செய்யப்பட்ட அலகுகள் | - 50 |
| மொத்த செலவு (TC) | - ரூபா 900 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

1. மொத்த நிலையான செலவு (TFC)
2. சராசரி நிலையான செலவு (AFC)
3. சராசரிச் செலவு (AC)
4. மொத்த மாறும் செலவு (TVC)
5. நிறுவனத்தின் இலாபம் / நட்டம்